செய்தி வெளியீடு எண் : 08 நாள் :03.05.2018

**தேனி மாவட்டம்,**
**அண்ணா பல்கழைக்கழக பொறியியல் பட்டப்படிப்பிற்கு**
**இணையதளத்தின் வாயிலாக முன்பதிவு செய்திட**
**தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**தெரிவித்துள்ளார்:-**

*****

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் அரசு பொறியியல் கல்லூரியில் அண்ணா பல்கலைக்கழக பொறியியல் படிப்பிற்கான இணையதள முன்பு பதிவு செய்திட அமைக்கப்பட்டுள்ள மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள கணினி அறைகள், இணைதள வசதி, வழிகாட்டி அறை, அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பிட வசதி, மாணவ, மாணவியர்கள் அமருவதற்கான இடவசதி குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழக அரசு மாணவ, மாணவியர்களின் நலனை கருத்தில் கொண்டு சென்னை வந்து செல்லும் காலம், செலவினங்களை தவிர்க்கும் பொருட்டு, மாணவ, மாணவியர்கள் தங்களது சொந்த பகுதியிலிருந்தே இணையதளத்தின் வாயிலாக பொறியியல் படிப்பிற்கு முன் பதிவு செய்யும் வசதியினை ஏற்படுத்திட உத்தரவிட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் 2018-19-ஆம் கல்வியாண்டிற்கான பொறியியல் மாணவ, மாணவியர்கள் சேர்க்கைக்கான முன் பதிவினை இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த கல்வி ஆண்டு முதல் விண்ணப்பம் பதிவு முதல் கலந்தாய்வு ஒதுக்கீடு ஆணை பெறுதல் வரை அனைத்தும் இணையதளத்தின் வாயிலாக நடைபெறவுள்ளது. மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ள மாணவ, மாணவியர்களின் சேர்க்கையில், விண்ணப்பம் பதிவு செய்தல், சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் பாடப்பிரிவு, கல்லூரி விருப்பம் தேர்ந்தெடுத்தல், ஒதுக்கீடு ஆணை பெறுதல் என அனைத்தும் இணையதளத்தின் வாயிலாக நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில், கணினி மற்றும் இணையதள வசதி உள்ளவர்கள் சுயமாக இணையதளத்தின் வாயிலாக பொறியியல் படிப்பிற்கு முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும், கணினி மற்றும் இணையதள வசதி இல்லாதவர்களின் வசதிக்காக போடிநாயக்கனூர் அரசு பொறியியல் கல்லூரியில் முன் பதிவு செய்திட சிறப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாணவ, மாணவியர்கள் வந்து செல்ல தேனி, சின்னமனூர், உத்தமபாளையம் ஆகிய பகுதிகளிலிருந்து கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்கிடவும், காவல் துறை பாதுகாப்பு வசதியும், எளிதில் முன்பதிவு செய்திட தடையில்லா மின் வசதி, இணையதள வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவ, மாணவியர்கள் 03.05.2018 முதல் 30.05.2018 வரை www.annauniv.edu/tnea2018 என்ற இணையதள முகவரில் முதற்கட்ட முன்பதிவு செய்திட அரசு பொறியியல் கல்லூரியில் முன்பதிவு செய்யும் பணி காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சனி, ஞாயிற்றுக்கிழமை உட்பட அனைத்து நாட்களிலும் நடைபெறும்.

முன்பதிவு செய்திட மாணவ, மாணவியர்கள் கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்று, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வு எழுதுவதற்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை எண், எட்டாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த பள்ளியின் விபரங்கள், சாதிச் சான்றிதழ், ஆதார் எண், பெற்றோரின் ஆண்டு வருமானம், முதல் பட்டதாரி சான்றிதழ் ஆகியவற்றுடன் பதிவு கட்டணம் செலுத்திட ஏதுவாக டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, நெட் பேங்கிங் விபரங்களை வைத்துக் கொள்ள வேண்டும் எனவே, மாணவ, மாணவியர்கள் போடிநாயக்கனூர் அரசு பொறியியல் கல்லூரியில் உதவி சேர்க்கை மையத்தின் மூலம் முன்பதிவு செய்து பயனடைமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.ஜெயந்தி அவர்கள், துணை முதல்வர் திருமதி வி.சுமதி அவர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**